மே - 2012

திருவள்ளுவர் ஆண்டு 2043

செந்தமிழ்

தொகுதி : 56
பகுதி : 7

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவண்ணாமலையில் தமிழ்ச்சங்கங்களின் கூட்டம் (13.5.2012)

தமிழக தமிழ்ச்சங்க கூட்டமைப்பின் தலைவர் இரா. குருசாமி உரையாற்றுகிறார்.
உடன் புதுவை தமிழ்ச்சங்கத் தலைவர் முனைவர் முத்து,
திருவண்ணாமலை ப. கண்ணன் மற்றும் நிர்வாகிகள்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 56 திங்கள் இதழ்
பகுதி : 7 திருவள்ளுவர் ஆண்டு 2043
மே 2012

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 6000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

பொருளடக்கம்

கண்டராதித்தச் சோழன் ஆட்சியில் சமயநிலை	எஸ். பாலாம்பிகை, எம்.ஏ., எம்.ஃபில்.	4
ஐங்குறுநூறு மருதம் உணர்த்தும் தேசியம்	பா. வாணிஸ்ரீ	10
கவ்வை	ஆறுவிரல் ஐம்பொறி	19
குருபாதம் நம்பியாண்டார் நம்பிகளின் சிந்தனைகள்	தா. குருசாமி தேசிகர்	22
தேவதேவன் கவிதைகளில் உள்ளடக்கம்	ந. விஜயபாலன்	28
இலக்கிய இலக்கு	கவிவேந்தர் கா. வேழவேந்தன்	33
பாரதியின் வேளாளன் சிறைபுகுந்தான் பாட்டு ஓர் ஆய்வு	கழுகுமலை வை.பூ. சோமசுந்தரம்	34
சங்க காலத் தமிழச்சிக்கு உரிமையிருந்ததா?	முனைவர் பொ. திராவிடமணி	37

இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம்!

மே மாதச் செந்தமிழ் இதழ் ஏழு சிறந்த கட்டுரைகளையும், இரண்டு மரபுக் கவிதைகளையும் தாங்கி தங்கள் கைகளில் தவழ்கிறது. கண்டராதித்தச் சோழன் ஆட்சியில் சமய நிலை எவ்வாறு இருந்தது என்பதை கி.பி. 9ஆம் நூற்றாண்டிற்கு நம்மை அழைத்துச் சென்று, கண்டராதித்தச் சோழனின் வரலாற்றோடு அக்காலச் சமய நிலையை நமக்குத் தெளிவுபடுத்தி இருக்கிறார் எஸ். பாலாம்பிகை அவர்கள். திருமதி வாணிஸ்ரீ அவர்கள் ஐங்குறுநூற்றில் மருதத்திணைப் பாடல்களில் தேசியம் பற்றிய கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்தி நமது பாராட்டைப் பெறுகிறார். ஆறுவிரல் ஐம்பொறி அவர்களின் "கவ்வை" பற்றிய கருத்து திருக்குறளில் இருந்தும், பழந்தமிழ் பாக்களில் இருந்தும் மேற்கோள் காட்டித் தெளிவுபடுத்தி இருப்பது பாராட்டிற்குரியது. நம்பியாண்டார் நம்பிகளின் சிந்தனையைத் தருமை ஆதீனப் புலவர் குருசாமி தேசிகர் அவர்கள் சைவ சமயச் சிந்தனைகளோடு வெளிப்படுத்தியிருக்கிறார்.

புதுக்கவிஞர்கள் வரிசையில் கவிஞர் தேவதேவன் அவர்களும் ஒருவர். அன்னாரது கவிதைகளில் காணப்படும் உள்ளடக்கச் சிந்தனைகள் குறித்து திரு. நா. விசயபாரதி அவர்கள் சிறந்த கட்டுரை தந்து இம்மாதச் செந்தமிழ் இதழில் இடம் பெறுகிறார். "வேளாளன் சிறை புகுந்தான்" என்னும் தலைப்பில் மகாகவி பாரதியார் கவிதை தந்தது ஒரு நுட்பமான வரலாறு. அப்பாடலை வைத்து வை.கு.சோமசுந்தரம் அவர்கள் வெளியிட்டுள்ள சிந்தனைகள் ஓர் ஆய்வாக இம்மாத இதழில் வெளிவந்திருப்பதோடு, சங்க காலத் தமிழச்சிக்கு இருந்த உரிமைகளை முனைவர் பொ. திராவிடமணி அவர்களின் கட்டுரையும் இடம் பெற்று இம்மாத இதழ் சிறந்தோங்குகிறது.

மேலும், கவிதைப் பிரியர்களுக்காக கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களின் "இலக்கிய இலக்கு" என்னும் கவிதையும் கவிஞர் ஆ. கனகசபாபதி அவர்களின் மரபு என்ற தலைப்பில் வந்திருக்கும் கவிதையும் இம்மாத இதழாகத் தங்களது கைகளில் தவழ்கிறது.

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

கண்டராதித்தச் சோழன் ஆட்சியில் சமயநிலை

எஸ். பாலாம்பிகை, எம்.ஏ., எம்.பில்.
முனைவர் பட்ட ஆய்வாளர்

முன்னுரை

'இறைமாட்சி' என்று திருவள்ளுவர் - அரசனின் ஆட்சியின் மாட்சி பற்றி ஓர் அதிகாரமே பாடியுள்ளார். அரசனை இறைவனாக அமைத்துப் போற்றும் பழக்கம் இருந்துள்ளது. காரணம், அனைத்துயிர்களும் வானின் மழையை நோக்கி வாழ்தல் போல, அனைத்து மக்களும் மன்னவனின் செங்கோல் ஆட்சியின் பாதுகாப்பை நோக்கியே வாழ்வர் என்கின்றார் திருவள்ளுவர்.

"வானோக்கி வாழும் உயிரெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி"

என்பது குறள். மேலும்,

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்"

என்றும் அவர் கூறுகின்றார். இத்தகு பொறுப்பும் அதன்வழி முக்கியத்துவமும் பெருமையும் பெற்றவர்கள் மன்னர்கள். அம்மன்னர்களின் சிந்தனை வழியே சமூகம் செல்லும் என்றும் சங்க நூல் கூறுகிறது.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்று புறநானூறு கூறுகிறது. எனவே மன்னர்கள் நல்ல ஒழுக்கமும் சமயச் சால்பும் சமூக அக்கறையும் கொண்டு வாழ்தல் வேண்டும் என்று தமிழ்நூல்கள் வலியுறுத்துகின்றன. அத்தகைய மன்னன் தான், நாட்டு மக்களின் மனதில் பண்பாட்டை வலியுறுத்தி வழி நடத்த முடியும் என்றும் புறம் கூறுகிறது.

'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே'

என்று விளக்கம் தருகிறது.

இவ்வண்ணமாக, மிகுதியும் பொறுப்புடன் ஆண்டவர்களில் சோழர்களும் ஒரு பகுதியினர். இவர்களுள் கண்டராதித்தச் சோழன் ஒருவன். இவன் ஆட்சியில் நிலவி இருந்த "சமய நிலை" பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

கண்டராதித்தன் - ஓர் அறிமுகம்

முதல் பராந்தகச் சோழனின் இரண்டாம் புதல்வன் கண்டராதித்தன். இவன் கி.பி.953 - இல் முடி சூட்டப்பெற்றான். இவன் 'இராசகேசரி' என்னும் பட்டம் புனைந்து ஆண்டு வந்தான். இச்செய்தியை ஆனைமங்கலச் செப்பேடுகளும் திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் தெரிவிக்கின்றன.

இவ்வரசன் காவிரியாற்றிற்கு வடக்கே, "கண்டராதித்தச் சதுர்வேதிமங்கலம்" என்னும் ஊர் ஒன்றை அமைத்தான் என்றும் ஆனைமங்கலச் செப்பேடுகள் கூறுகின்றன. இவ்வூர் திருச்சிராப்பள்ளி மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில் கொள்ளிட ஆற்றிற்கு வடகரையில் திருமழபாடிக்கு மேற்கே ஒரு மைல் தொலைவிலுள்ளது. இது 'கண்டிராச்சியம்' என்று இன்று வழங்கப் பெறுகின்றது. தென்னாற்காடு மாவட்டம் உலகபுரத்திலுள்ள ஒரு கல்வெட்டால் கண்டராதித்தப் பேரேரி என்னும் நீர்நிலை ஒன்றும் இருந்தது தெரிகிறது.

இம்மன்னன், தன் ஆட்சிக்காலத்தில் ஓர் ஊரும் ஒரு புதிய ஏரியும் ஏற்படுத்தியுள்ளான். சதுர்வேதி மங்கலம் என்னும் ஊர், கோயிலில் வழிபாடு செய்வோர் தங்கி வாழ அமைக்கப்பட்டுள்ளது. ஏரிப்பாசனம் காலம் கடந்தும் பயன்தர அமைக்கப் பெற்றது. சமூக அக்கறையுடன் இம்மன்னன் இவற்றை அமைத்துள்ளான்.

இம்மன்னனுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். வீரநாராயணி, செம்பியன் மாதேவி என்பார் அவர்கள். முதல் மனைவி வீரநாராயணி என்பவள் கண்டராதித்தன் முடி சூடுவதற்கு முன்னரே இறந்து விட்டாள். இரண்டாவது மனைவி செம்பியன் மாதேவி மழநாட்டுச் சிற்றரசனின் மகள். இச்செய்தியை "மழவரையர் மகளார் ஸ்ரீ கண்டராதித்தப் பெருமாள் தேவியார்

செம்பியன் மாதேவியார்" என்று கல்வெட்டு கூறுகின்றது. இப்பெண், கணவர் இறந்த பின்னரும் உயிருடனிருந்தாள் என்ற செய்தி விருத்தாசலம், திருவக்கரை ஆகிய ஊர்களிலுள்ள கல்வெட்டுக்களால் புலப்படுகிறது.

கண்டராதித்தனுக்குப் பல ஆண்டுகள் வரையில் மகப்பேறின்றி இறுதியில் செம்பியன் மாதேவியால் ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு 'மதுராந்தகன்' எனவும் 'உத்தமசோழன்' எனவும் இரு பெயரிட்டு வழங்கலாயினர். தன் மகன் சிறு குழந்தையாயிருந்தமையால் தன் தம்பி அரிஞ்சயனை இளவரசுப் பட்டங்கட்டி அரசியல் துறையில் பழக்குவது கண்டராதித்தனின் இன்றியமையாத கடமையாயிற்று. ஆகவே, இவன் கி.பி.953 - ஆம் ஆண்டில் அரிஞ்சயனை இளவரசனாக்கிப் பட்டமுங் கட்டினான். மதுராந்தகன் இளைஞனாயிருந்தபோது கண்டராதித்தச் சோழன் கி.பி. 957இல் மறைந்தான்.

செம்பியன் மாதேவி, தன் இளம் புதல்வன்பால் வைத்த அன்பின்பெருக்கினால், அவனை வளர்த்தலையே தன் கடமையாகக் கொண்டு சிவஞானியாக நிலவிய கணவனைப் பிரிந்தும் உயிருடன் இருந்தாள். அவ்வரசி, சிவபெருமானுக்குப்பல்வகைத் தொண்டுகள் புரிவதிலேயே தன் வாழ் நாட்களைக் கழித்து வந்தாள்.

சைவமும் பிற சமயங்களும்

சைவம் சிவனோடு சம்பந்தமுடையது. சிவம் என்பது அன்போடு தொடர்புடையது. எனவே அன்பின் மறுபெயரே சைவம் என்று முன்னோர்கள் எண்ணினார்கள். 'அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்' என்று திருமூலர் இதனை விளக்குகின்றார். இத்தகு அன்பின் வடிவமாய் விளங்கும் சைவம் பிற சமயங்களை வெறுக்கவும் இல்லை ; மறுக்கவும் இல்லை. சமயங்கள் பலவானாலும் அவை சென்று அடையும் இடம் ஒன்றுதான் என்று சைவம் கூறுகிறது. இராமலிங்க அடிகள் நதிகள் பலவானாலும் அவை சென்றடையும் கடல் ஒன்றேயாதல் போல, சமயங்களின் முடிவிடமும் ஒன்றுதான் என்றும் அதுதான் பரம்பொருள் என்றும் கூறுகின்றார்.

"பொங்கு பல சமயமெனும் நதிகளெல்லாம் புகுந்து
கலந்திட நிறைவாய்ப்பொங்கி ஓங்கும் கங்குகரை காணாத கடலே"
என்பன பாடல் வரிகள்.

மேலும் எந்தத் தெய்வத்தை எந்தப்பெயரால் யார் வணங்கினாலும் அவை சிவபெருமானின் அருளையே குறிக்கும் என்றும் சாத்திர ஆசிரியர்கள் இச்செய்தியை, "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி அங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்" என்றும் "அறுவகைச்சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறாம் குறியது உடைத்தாய் என்றும் சிவஞானசித்தியார் கூறுகிறது.

தென்னாட்டு மக்களால் "சிவன்" என்று போற்றப் பெறும் கடவுள் தான் எந்நாட்டவராலும் இறைவன் என்று துதிக்கப் பெறுகின்றார் என்று மாணிக்கவாசகரும் இக்கருத்தைக் கூறுகின்றார். "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்பது திருவாசகம்.

இங்ஙனமெல்லாம் சைவசமயம் பிறசமயங்களைப் படி முறைகளாகக் கொண்டு ஏற்றுக் கொள்கிறது; மறுக்கவில்லை. திருஞானசம்பந்தர் போன்றோர் சமண, பௌத்தத்தை வெறுத்துப் பாடியது கூட அச்சமயத்தை மேற்கொண்டவர்கள் கொல்லாமை என்னும் விரதம் தங்களுக்கு உரியது என்று இருந்தும், திருநாவுக்கரசர், சம்பந்தர் போன்றோர்களைக்கொல்வதற்கு ஏற்பாடு செய்தனர் ஆகையால் அவர்கள் அச்சமயங்களின் போலிகளாக விளங்கினார்கள் என்பதால்தான். எனவே, உலகிற்கு ஒரே சூரியன் போல, ஒரே திங்கள் போல இறையும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்பது சைவசமயக் கருத்து. "ஒன்றென்றது ஒன்றே காண்! ஒன்றே பதி" என்பது சிவஞானபோதம். இத்தகு மனமுடைய சைவர்கள் எல்லாச் சமயங்களையும் பொதுவான நிலையில் ஏற்றுக்கொள்வர்; வெறுக்க மாட்டார்கள்.

கண்டராதித்தச் சோழனின் காலத்தில் சமயங்கள்

கண்டராதித்தச் சோழன் சிவபெருமானை வழிபட்டவன். இவன் மனைவி செம்பியன் மாதேவியும் சிறந்த சிவபக்தை. இவன், சைவ சமயத்தில் பெரிதும் பற்றுடையவனாயிருந்தாலும், வைணவம், சமணம் முதலான புறச்சமயங்களிடத்தில் சிறிதும் வெறுப்புக் காட்டியவனல்லன். இவன், தான் அமைத்த கண்டராதித்தச் சதுர்வேதி மங்கலம் என்ற நகரில், "கண்டராதித்த விண்ணகரம்" என்னும் திருமால் கோட்டம் ஒன்று எடுப்பித்திருப்பதும்; தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பள்ளிச்சந்தல் என்ற ஊரில்

"கண்டராதித்தப்பெரும்பள்ளி" என்னும் அமணப்பள்ளியொன்று காணப்படுவதும் புறச்சமத்தினரையும் நன்கு மதித்து அவர்கள்பால் அன்புடன் ஒழுகியவன் என்பதை விளக்குவனவாகும்.

கண்டராதித்தனுக்கு "மும்முடிச் சோழன்" என்ற ஒரு பெயரும் உண்டு. சிதம்பரம் வட்டத்திலுள்ள உடையார் குடியில் காணப்படும் கல்வெட்டு ஒன்று இவனை "மேற்கெழுந்தருளிய தேவர்" என்று குறிப்பிடுகின்றது. இச்சொற்றொடரின் உண்மைப் பொருள் ஆராய்ச்சிக்குரியது. இவன் மேற்றிசையில் பகைவரோடு போர்நிகழ்த்தி அதில் இறந்த செய்தியை மங்கல வழக்காகக் கூறப்பட்டிருக்கிறது என்பது சில அறிஞர்களின் முடிவு. பண்டைச் சோழ மன்னருள் சிலர், ஆற்றூர்த்துஞ்சின தேவர், குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், பொன்மாளிகைத்துஞ்சின தேவர் என்று காட்டப்பெற்ற தொடர்கள் அவ்வேந்தர்கள் எந்த இடங்களில் இறந்தனர் என்ற செய்தியைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. ஆனால் "மேற்கெழுந்தருளிய" என்ற அடைமொழி அவற்றைப்போல் இறந்த செய்தியை உணர்த்தவில்லை. அவ்வேந்தன் இறந்த செய்தி அதில் கூறப்பட்டிருந்தால் அதற்குரிய அடைமொழி அக்கால ஒழுகலாற்றின்படி அமைந்திருக்கும் என்பது திண்ணம். எனவே, "மேற்கெழுந்தருளிய" என்ற தொடர்க்கு வேறு பொருள் இருத்தல் வேண்டும். அது சோழ நாட்டிற்கு மேற்கேயுள்ள நாடுகளுக்குத் தலயாத்திரை சென்று திரும்பி வராமையைக் குறிக்கிறது.

சிவஞானியாக விளங்கிய கண்டராதித்தன். தன் அரசைத் துறந்து தலயாத்திரை மேற்கொண்டிருத்தல் இயல்பாகும். பங்களூர் மாவட்டத்தில் காணப்படும் கல்வெட்டு ஒன்று இவ்வரசனைச் "சிவஞான கண்டராதித்தர்" என்று குறிப்பிடுவதால் இவனுடைய சமயப்பற்றுத் தெளிவாக உணரப்படுகிறது. மேலும், இவ்வரசனுடைய படைத்தலைவன் ஒருவன், கங்க நாட்டிலுள்ள பழவூர்க் கோயிலில், கண்டராதித்தவிடங்கரையும், உமா பரமேசுவரியாரையும் எழுந்தருளுவித்து வழிபாட்டிற்கு நிவந்தம் அளித்துள்ளான் என்ற செய்தியும் அக்கல்வெட்டில் காணப்படுகிறது.

கண்டராதித்தன் ஒரு திருமுறை ஆசிரியர்

கண்டராதித்தன் மிகுந்த சிவபக்தியும் செந்தமிழ்ப் புலமையும் ஒருங்கே அமையப்பெற்றவன். தில்லையம்பதியில் நடம்புரியும்

திருச்சிற்றம்பல முடையார் திருவடிகளில் பெரிதும் ஈடுபாடு உடையவன். அப்பெருமான் மீது இவன் பாடிய திருப்பதிகம் ஒன்று ஒன்பதாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. அப்பதிகத்தின் இறுதியிலுள்ள திருக்கடைக் காப்புப் பாடலில் தஞ்சையர்கோன் எனவும் கூறியிருக்கிறார்.

சீரார்மல்கு தில்லைச் செம்பொன்

அம்பலத் தாடி தன்னைக்

காரார் சோலைக் கோழி வேந்தன்

தஞ்சையர் கோன் கலந்த

ஆரா இன்சொற் கண்டராதித்தன்

அருந்தமிழ் மாலைவல்லார்

பேரா உலகில் பெருமை யோடும்

பேரின்பம் எய்துவரே

என்னும் பாடல் அது.

நிறைவுரை

கண்டராதித்தன் ஆட்சியில் சைவம் தழைத்திருந்தது என்பதுடன் வைணவர்கள் கோயிலும் சமணப்பள்ளியும் கட்டப்பெற்றுப் போற்றப்பட்டன என்பதும் அறிய வேண்டிய தகவல்களாகும். சமயம், பொறையுடன் எல்லோரையும் அரவணைத்துச் செல்லக் கற்றுக் கொடுப்பது என்பதனைக் கண்டராதித்தச் சோழன் தாமும் உணர்ந்து, தன்நாட்டு மக்களும் உணரும்படி ஆட்சி புரிந்துள்ளான் என்பது தெரிகிறது.

ஐங்குறுநூறு மருதம் உணர்த்தும் தேசியம்

பா. வாணிஸ்ரீ
மதுரை

முன்னுரை

மனித இனம் தோன்றிய காலத்தில் நாடுகளும், அரசுகளும் தோற்றம் பெறவில்லை. காலப்போக்கில் மனிதனால் இவை அனைத்தும் தோற்றுவிக்கப்பட்டன. இனக்குழச் சமூகமும். நாகரீகமும் காலங்கள் வளர வளர மனிதனின் சிந்தனைப் போக்குகளும் எண்ணங்களும் வளரத் தொடங்கின. இந்த வளர்ச்சியின் விளைவுகள் தான் குடும்பம், குழு, அரசு, அரசன் எனப் பல்வேறு சமூக நிறுவனங்களை உருவாக்கிக் கொண்டான். இதற்குள் நாடு, மொழி, சமயம், பண்பாடு, பழக்கவழக்கம் என தனக்கான வாழ்வியல் நெறியை வளர்த்துக் கொண்டான் இந்த ஒழுங்கிலிருந்து தோற்றம் பெற்றுதான் தேசியத்தின் பொருளும் வரையறைகளும் கூட காலத்திற்குக் காலம். மாறுபட்டுக் கொண்டிருக்கிறது. பண்டைக் கால இலக்கியமான ஐங்குறுநூறு வழியாக நாம் அறிய இயலும் தேசியம் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது. அவற்றில் ஐங்குறுநூற்றின் மருதத் திணைப் பாடல்களில் முதலில் இடம் பெறும் 'வேட்கைப் பத்து" என்ற பத்துப் பாடல்கள் மற்றும் தேசியம் பற்றிய கருத்துக்களை எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதை வெளிக் கொண்டு வருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

தேசம் சொல்லாய்வு

"தேசம் என்பதற்கு இடம், உறையுள், கட்டளை, கூர்மை, நாடு, பிரபை என்று தமிழ்மொழி அகராதி விளக்கம் கூறுகிறது."

"தேசியத்தின் வித்து தேசமாகும். தேசம் என்பது 'தேஷ்' என்பதற்குரிய வடமொழிச் சொல்லாகும். இதன் அடிச்சொல் 'திஷ்' என்பதாகும். இதனுடன் இகரமும் அகரமும் இணைந்து 'ஏ' என்றாகி 'தேஷ்' என்று வந்துள்ளது" என வடமொழி ஆங்கில அகராதி விளக்கம் கூறுகிறது."

"தேசம் என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லான 'Nation' என்பது நேசியோ (Natio) என் இலத்தீன் மொழிச் சொல்லை மூலமாகக் கொண்டது. நேசியோ என்றால் 'பிறந்தது' அல்லது 'பிறந்த இடம்' என்பது பொருளாகும். இதன் வேர்ச்சொல் நேட்ஸ் (Natus) நாடு என்னும் பொருளைக் கொண்டது." என்று கூறுகிறார் கு.ச.ஆனந்தன். தேசியம் என்பது ஒரு கலைச் சொல். இச்சொல் வழக்குச் சொல்லாகப் பயன்பட்டாலும், இதற்குரிய அடிப்படைக்கூறுகள் மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்தே இருந்து வருகின்றது. பழங்காலத்தில் ஏற்பட்ட குழச்சமுதாய தேசியத்தின் கூறுகள் எனலாம். குழச் சமுதாயத்திற்குரிய அனைத்துப் பண்புகளையும் தேசியப் பண்புகளாகவும் கூறலாம்.

தேசியம்

"தேசியம் அலலது தேசிய உணர்வு என்பது ஒவ்வொரு மனித சமுதாயமும் தனது நாகரீகத்தின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்துவதற்கு. ஏற்ற வகையில் தனக்கென்று தனியான சட்டமுறைகளையும், அரசாங்க நிறுவனங்களையும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டுமென்ற கொள்கையை அல்லது உரிமையை எடுத்துக் காட்டும் உணர்வே ஆகும்." என வாழ்வியல் களஞ்சியம் சுட்டுகிறது. "ஒரு தேசிய இத்தால் நிறுவப்படும் அரசியல் சமூகம் என்பதே தேசியம்" என மார்க்ஸ் அவர்கள் விளக்கம் தருகின்றார்.

ஒவ்வொரு இன மக்கள் சமுதாயத்திற்கும், அவர்களின் பண்பாட்டிற்கும் என தனித்தனிப் பண்புகள் உண்டு. இது ஒரு நாட்டில் வாழும் பிற மக்களின் பழக்கவழக்கத்திற்கும் பண்பாட்டிற்கும் எனத் தனித்தனியான சுதந்திரமான சட்டங்களையும், அரசு நிறுவனங்களையும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். பலதரப்பட்டவர்களையும் ஒன்றிணைத்து அதன் கீழ் வாழுமாறு அமைத்து இருப்பதே ஒழுங்கு முறை என்ற இணைப்பாகும். இந்த இணைப்பினையே சட்டம் அல்லது தேசியம் என்ற வகையில் ஒன்றினைக்கும் நிகழ்வாகும். அதன்கீழ் வாழும் மக்கள் அனைவரையும் ஒரு நாட்டினர் என்கிறோம். அந்த நாட்டில் வாழும் மக்களைத் தேசியம் என்கிறோம்.

தேசிய உணர்வின் வளர்நிலைகள்

ஒரு குறிப்பிட்ட மக்கள் சமுதாயம் ஒரு பொதுவான நில அமைப்பில் வாழும் முறையை ஏற்றுக்கொள்ளும்போது நாம் யாவரும் அதில் வாழ்தல் வேண்டுமென்ற விருப்பத்தினால் அவர்கள் ஒற்றுமை உணர்வை வளர்ப்பார்கள். இந்த ஒற்றுமை உணர்வை வளர்க்கும் வேறு பல காரணிகள், அவர்கள் ஒரே தாய் மொழியைக் கொண்டிருத்தல், ஒரே சமய நெறியைப் பின்பற்றுதல், ஒரே பண்பாட்டினைப் பேணுதல், ஒரே பண்டைய வரலாற்றைப் பெற்றிடுதல், பொதுவான போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தால், ஒரே தன்மையான பொருளாதார நோக்கங்களை கொண்டிருத்தல் முதலியவற்றாலும் ஏற்படுதல் கூடும. தமக்கென தனியாக அரசையும், சட்டங்களையும் பெருதல் வேண்டும் என்ற அரசியல் உணர்வை அவர்கள் கொண்டிருத்தல். அதுவே அவர்களை ஒரு தேசியமாக இணைக்கும் வலுவான காரணியாகும்.

மருதம் விளக்கம்

வயலும் வயல்சார்ந்த இடமும் மருத நிலமாகும்.

"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்" (தொல் - அகம் - 951)

என இந்திரன் விரும்புகின்ற மிகுதியான நீரையுடையது மருத நிலம் ஆகும். நல்ல விளைச்சல் தகுதியுடைய விளைநிலத்தைக் கொண்டதும் மருத நிலமாகும் என மருதத் திணைக்கு விளக்கம் தருகிறார் தொல்காப்பியர்.

தலைவியின் தேசப்பற்று

வேட்கைப்பத்து பாடலில் இடம்பெறும் தலைவர், தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்து பரத்தையிடம் சென்ற வருத்தத்தைக் கூறும்போது நாட்டுநலனையும், மக்கள் நலனையும் மட்டுமே கருதி வாழ்ந்து இருக்கிறாள் என்பதை அறிய முடிகிறது. மன்னனுடைய ஆட்சி சிறப்பாக அமைய அவள் இயற்கையை வழிபடுகிறாள். நாட்டின் பொருளாதாரம் குறைவு ஏற்பட்டு விடக்கூடாது என்பதனை

"நெல்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே" (ஐங் - 1)

என எம் மன்னனாகிய அதன் அவனி பல்லாண்டுகள் வாழ்க எங்கள் நாட்டின் வயல்களில் நெல்வளம் சிறந்து விளங்க வேண்டும். நாட்டின் பொன்வளம் சிறந்து. விளங்க வேண்டும். என்பதையே தலைவி விரும்பி வாழ்ந்தாள். அவளின் தோழியாகிய நானோ அரும்புகள் நிறை உடைய காஞ்சியும் சினையை உடைய சிறுமீன்களும் நிறைந்த ஊரின் தலைவன் வாழ்க என்றும், அவனுக்குத் துணையாக விளங்குமு; பாணனும் வாழ்கஎன்று இறைவனை வேண்டி விரும்பி வாழ்ந்து வந்தோம் என்ற தோழியின் கூற்று வாயிலாக தலைவியின் தேசப்பற்று அறியலாம்.

மன்னரின் ஈகை

ஒருவன் சேர்த்து வைத்த செல்வத்தில் எல்லாம் சிறந்த செல்வம் எதுவென்றால் தான் பெற்ற பொருளைப் பிறர்க்குக் கொடுத்து அதைக் கண்டு தான் மகிழ்ச்சி கொள்வது. அத்தகைய பண்பு அன்றைய மன்னர்களிடம் இருந்துள்ளதைச் சங்க இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன எனலாம். கடையெழு வள்ளல்கள் மற்றும் குமண வள்ளல் போன்ற மன்னர்களும் மற்றும் புலவர்களான பெருந்தலைச் சாத்தனார் இதர புலவர்களும் கொடுத்து உதவும் பண்பு உடையவர்களாக. இருந்திருக்கின்றனர். பண்டையப் பண்பாட்டில் ஈகை என்பது சமூக விழுமியாகமாகக் கருதப்பட்டது என்பதை இக்கருத்தால் அறிய இயலும், எனவே தான் தலைவர் மன்னனின் ஈகை செயல் இன்னும் சிறக்க வேண்டி

"விளைக வயலே வருக இரவலர்
எனவேட் டோளே யாயே யாமே" (ஐங் - 2)

எனக் கூறுகிறாள். ஈகையின் சிறப்பை உணர்ந்த வள்ளுவர்

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு"
(குறள் - 231)

என்று சுட்டிச் செல்கிறார்.

நாட்டின் பொருள் வளம்

உழவுத் தொழிக்கும் அதன் வளர்ச்சிக்கும் உழும் காளைகள் இன்றியமையாதவை. மிகுதியான வருவாய்க்கு அதிகப் பால் கறக்கும் பசுக்கள் தேவையாகின்றன. வயல் வளமும், செல் வளமும் ஒரு சேர வேண்டிப் பெண்கள் 'நோன்பு மேற்கொண்டிருந்தனர். பகடுகளின். சிறப்பு நோக்கி பண்டைக்கால புலவர்கள் வள்ளல்களின் பகடுகளையும வாழ்த்திப் பாடினர். பகடு சிறத்தல் என்பது எண்ணிக்ல்கயில் அதிகரித்து உழவுத் தொழிலை மேம்படுத்த. வேண்டும் என்பதற்காகப் பாடப்படுகிறது. மேலும் பசுக்களின் மடியில் அதிகப் பால் ஊறவேண்டுமென்றும் வணங்குகின்றனர் என்பதனை

"பால்பல ஊறுக பகடுப சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே" (ஐங் - 3)

என்ற பாடல் வரிகள் மூலம் நாட்டின் தொழில் வளமும் செல்வ வளமும் சிறக்கும் என்ற எண்ணமும் நாட்டின் மீதான பற்றும் புலப்படுகிறது.

இதனை,

"இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள் - 81)

என்று வள்ளுவர் வேளாண்மையின் சிறப்பையும், இல்லறத்தின் ஒப்பிடுகிறார்.

மன்னரின் திறம்

நாட்டை ஆளுகின்ற மன்னரின் திறமையுடன் செயல்படும்போது நாடு மட்டுமின்றி மக்களும் மகிழ்ச்சியாக வாழ்வார்கள். மக்களுடைய மகிழ்ச்சியை தொடர்ந்து அந்நாட்டில் பஞ்சமும் வலிமையை முறியடிக்கப்படவும், பருவ மறை தவறாது பெய்யவும் நாட்டின் நலனையே விரும்புகின்ற தலைவி.

"பகைவர்புல் ஆர்க பார்ப்பான் ஓதுக
எனவேட் டோளே யாயே" (ஐங் -40

மன்னன் வாழ்க! அவன் பகைவர் பெருமை இழந்து புல்லரிசிச் சோறு உண்க: பார்ப்பனர் வேதம் ஓதுக! என்றே விரும்பினாள் தலைவி, கரும்பும் பூக்கும்,

நெல்லும் பூக்கும் ஆனால் கரும்பு பூத்து தன் பரம்பரையை வளர்க்காது. நெல் பூத்தும் காய்த்தும் தன் வழிமுறையை வளர்க்கும். அது போலப் பூத்தாலும் பரத்தை மகப் பெற்றுக் குடியை வளர்க்கமாட்டாள். தலைவி பிள்ளை பெற்று வளர்த்துக் குடியை வளரச் செய்வாள். இவ்வுள்ளுறை ஓரம்போகியோரின் உலகியல் அறிவையும் உளவியல் அறிவையும் ஒருசேரக் காட்டுகிறது.

மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமானால் வீரமுடைய அரசன் மட்டும் போதாது. நாட்டில் வறுமை, பிணி இல்லாதிருக்க வேண்டும் இக்கருத்தை புலவர் உறுபசியும் ஓவாப்பணியும் சேராது இயல்வது நல்ல நாடு என வரையறை கொடுக்கிறார். எனவே தான் தலைவி, இறைவனிடம்

"பசிஇல் ஆகுக பணிசேன் நீங்குக
எனவேட் டோளே யாயே யாமே" (ஐங் - 5)

மன்னன் வாழ்க, நாட்டில் பசி என்ற பிணி அல்லது நோய் இல்லாமல் நீங்குக, ஏனைய நோய்களும் அண்டாமல் நீங்கிச் செல்க, என்றே தலைவி வேண்டினாள். நானோ ஆண் முதலை தன்னோடு வாழும் முதிர்ந்து பெரிய மீனைத் தேர்ந்து உண்ணும் நீர் நிலைகளைக் கொண்ட ஊரை உடையவன். பிற பெண்களின் வீட்டு முற்றத்தில் அல்லாமல் நாட்டின் எம் முற்றத்தில் வாழ வேண்டும் என வேண்டினேன் என்கிறாள். நாட்டின் நன்மையைக் கருதி வாழ்ந்த தலைமக்கள், மன்னனின் வீரத்தை மதித்தனர். மேலும், மணிமேகலை நூலில் அட்சயப் பாத்திரம் வழங்கிய மணிமேகலை தெய்வம்.

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க" (மணிமே - 1.70)

என வாழ்த்துவதாக மணிமேகலை நூல் குறிப்பிடுகிறது.

மன்னரின் ஆட்சி

குடியை ஆளும் கோமகன் நல்லநெறியில் செங்கோல் ஆட்சி செலுத்தி வந்தால் நாட்டில் நேர்மையும் நீதியும் சிறந்து விளங்கும். அன்று நாட்டை ஆண்ட கோப்பெருஞ்சோழன், மனுநீதிச்சோழன், பொற்கைப் பாண்டியன ஆகியோர் நீதிக்காவும் நேர்மைக்காகவும் தன்னையும் தன்

உறுப்புகளையும் உயிர்களையும் கூட நாட்டுக்காக அர்ப்பணித்தார்கள். மன்னனுடைய ஆட்சியில் நேர்மை, நீதி, கொடி கட்டி பறக்கும் சமயத்தில் மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இதனை

"வேந்துபகை தணிக ஆண்டுபல நந்துக
எனவேட் டோளே யா யாமே' (ஐங் -6)

என்ற வரியின் மூலம், மன்னனின் பகைவரெல்லாம் அவனுடைய நண்பர்களாக மாற வேண்டும் என்பதைச் சுட்டுகிறது. இதனால் நாட்டில் அமைதி நிலவும் என்பது தலைவியினர் எண்ணம். மேலும் அமைதியற்ற நாட்டில் இல்லறம் சிறந்து விளங்க முடியாது என்பதாலும் இவ்வாறு கூறுவதாகக் கொள்ளலாம். இதனால், வேந்தனின் உயிர் வாழும் காலம் அதிகரிக்கத் தலைவி வேண்டுகிறாள் என அறிய முடிகிறது. இதனை

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லதுநாடு" (குறள் - 735)

என வள்ளுவர் விளக்கமளிக்கிறார்.

மன்னரின் அறம்

அறத்தின் வழியே நடக்கும் மனிதனே உயர்ந்த நற்குணங்களுக்குக் காரணமானவன். ஏனெனில் அறமே எல்லாவற்றிற்கும் முதன்மையானது. எனவே தான் மனிதனுடைய வாழ்க்கையில் முதலில் அறம் அதன் பின்பு பொருள் மற்றும் இன்பம் அதனால் அமைகின்ற வீடுபேறு என வகைப்படுத்திக் காட்டியிருக்கின்றனர். இதனை உணர்ந்த தலைவி மன்னனுடைய ஆட்சியில்,

"அறம் நனி சிறக்க அல்லது கெடுக
எனவேட் டோளே யாயே யாமே" (ஐங் – 7)

என அரசனை வாழ்த்தி அவனால் நிலை நிறுத்தப்படும் அறம் தலைக்கு மாறும், அறத்திற்கு மாறானவையான பாவம் நீங்குமாறும் வேண்டினாள். ஏனெனில் ஒருபுறம் அறம் தழைத்து மறுபுறம் பாவங்கள் வளர்ந்தால் எந்தப் பயனும் கிடைக்காது என்பதை அறிந்தே தலைவி அவ்வாறு கூறினாள் என அறியமுடிகிறது.

மன்னனின் நீதி

ஒரு நாட்டின் அரசன் கடவுளாகக் கருதப்பட்டான். ஆகவே அவன் மக்களின் நலத்தை மனதில் கொண்டு ஆட்சி செய்தல் வேண்டும். மக்களின் நலன் கருதாது ஆட்சி செய்வானேயானால் அவன் நாட்டில் நீதியும் நேர்மை ஒழுங்காக அமையாது. நீதியும் நேர்மையும் இல்லாதபோது அவனது நாட்டில் மக்கள் தீய செயலில் ஈடுபடுவர். மக்களுக்கு அந்த நிலையை ஒரு மன்னன் ஏற்படுத்திவிடக்கூடாது. இவற்றை உணர்ந்த தலைவி நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிலைத்து நிற்க

"அரசுமுறை செய்க களவுஇல் ஆகுக
எனவேட் டோளே யாயே யாமே" (ஐங் - 8)

என்ற பாடலில் அரசன் முறை செய்யத் தவறினானாயின் நாட்டில் மழை தவறும். மழை தவறினால் மக்களின் வாழ்வு கேள்விக்குள்ளாகும். இதனால் அவனது நாட்டில் கள்வரும், கொள்ளையரும், பிற தீயவர்களும் பெருகுவர். இதனால் இல்லறம் சிறந்து விளங்காமல் போய்விடும். அரசு முறை செய்ய வேண்டும் எனவும் களவு இல்லாமல் நீங்க வேண்டும் என்றும் தலைவி வேண்டுவதைக் காணலாம்.

பொருள் வளம்

உலக நன்மையைக் கருதிய தலைவி இன்பத்திற்குக் காரணமான நற்செயல்கள் பெருகவும், துன்பத்திற்குக் காரணமான செயல்கள் அறியவும், விரும்பி வழிபட்டாள். இது உலகின் பொது நன்மை என்றபோதும் இங்கு தேச நலனின் மையப்பொருளே முக்கியப்படுததப்பட்டிருக்கிறது.

"நன்று பெரிது சிறக்க தீதுல் ஆகுக
எனவேட் டோளே யாயே யாமே" (ஐங் - 9)

என தேசத்தின் மீதான அக்கறை தலைவிக்கு இருந்த தன்மையை அறிய முடிகிறது.

சங்ககாலத் தனியுடைமைச் சமூகத்தின் விழுமிய மதிப்பாகத் தேசியப் பற்று முக்கியப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஐங்குறுநூறு பல பதில்கள் உணர்த்தி நிற்கின்றன.

"மாரி வாய்க்க வளம்நனி சிறக்க
எனவேட் டோளே யாமே" (ஐங் - 10)

தலைவனின் பிரிவுத் துயரம் தலைவியை வாட்டியபோதம் அதிலிருந்து விடுபட முயற்சிக்கிறாள் தலைவி. மாலைக்காலம் வந்தவுடனே நெல்தூவி மலர் தூவி இறைவனை வழிபட்டு தலைவனின் சிந்தனையை வழிபாட்டின்மீதும் தனது நாட்டில் மீதும் செலுத்துகிறாள். உலக வாழ்வுக்கு இன்றியமையாத மழை வளத்தையும், அதன் விளைவான செல்வச் செழிப்பையும் மட்டுமே விரும்பியிருக்கிறாள். இப்பாடலில் நாட்டின் தேசிய வளம் சிறக்க வேண்டும் என்ற எண்ணம் தலைவிக்கு இருந்தமையைத் தோழியின் வாயிலாக அறியமுடிகிறது.

முடிவுரை

தேசிய எழுச்சி பிற்காலத்தில் தோன்றுவதற்கு முன்பாகவே தேசம் பற்றிய சிந்தனை, நாட்டுப்பற்று, தேசியத் தன்மை போன்றவை மக்களிடம் நிலவியுள்ளதை இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. இதனால் தேசியம் பற்றிய சிந்தனை பழங்காலத்தில் இருந்தே இடம் பெற்றுள்ளது.

வேட்கைப்பத்தில் இடம் பெறும் தலைவி நாட்டின் நலனையும் மன்னனின் நல்வாழ்வையும் விரும்புபவளாக உள்ளாள். மேலும் நாட்டு மக்களின் பசி, பணி, பகை போன்றவை இல்லாமல் எல்லோரும் அன்புடனும் நேர்மையுடனும் வாழ வேண்டம் என்ற வேட்கை உடையவளாக இருக்கிறாள் என்பதையும் தேசியம் என்பது எல்லைகளும் பண்பாட்டு ஒன்றிணைப்பையும் கொண்ட மக்கள் திரளைக் குறிக்கும் சொல்லாகவும் விளங்குகிறது. தேசியப் பார்வை என்பது நாகரீகமடைந்த வேளாண் சமூக காலத்தில் இருந்து வளரத் தொடங்கியதை ஐங்குநூறு பாடல்களின் வழி அறிய முடிகிறது. அரசனும் அவன் கீழ்ச் செயல்படும் அரசு நிறுவனங்களுக்கும் நேர்மையாக இருப்பதே ஐங்குறுநூறு மருத உணர்த்து தேசியமாகும்.

கவ்வை

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

தலைவன் தலைவியின் களவொழுக்கத்தை அறிந்த ஊரார் பழித்துக் கூறுதலைக் கவ்வை என்பர். பழித்தல், தூற்றுதல், நிந்தித்தல், பரிகசித்தில், ஏளனம் (செய்தல்) என்பவை ஒரு பொருள் தரும் பல சொற்களாம். அம்பல், அலர்-என்ற சொற்களும் இதனையே குறிக்கும்.

பழிச் சொற்கள், அலர்ந்த மலரின் மணம் போல எங்கும் பரவுகின்றமையால் இவற்றை அலர் என்று இயம்பினர். களவொழுக்கம் முதலில் சிலருக்கே புலனாதல் கூடும். அப்போது அச்செய்தியைச் சிலரே பேசுவர் இஃது அம்பல் எனப்படும். அச்செய்தி பலராலும் பேசப்படும் நிலைக்குப் பெருகுதலும் உண்டு. இது அலர் எனப்படும். அம்பலின் வளர்ச்சியே அலராம். அம்பலம் என்ற சொல்லுக்குச் செய்திகளை அறிவிக்கும் சபை, பொதுவிடம், மன்றம் என்று பொருள். அம்பலமாகிவிட்டது என்றால் தெரிந்து விட்டது என்று நாம் பொருள் கொள்கிறோம். எனவே அம்பலம் என்ற சொல் அம்பல் என்ற சொல்லிலிருந்து பிறந்ததேயாம்.

உடன்போக்கு, கவ்வை, மீட்சி என்ற மூன்றும் களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித் தொகையாம். இம்மூன்றனுள் இரண்டாம் இடத்தது கவ்வை. இதனை அகப்பொருள் விளக்கம் வரைவியல் 180 ஆம் நூற்பா பகர்கிறது.

போக்கு கற்பொடு புணர்ந்து கவ்வை
மீட்சியென் றாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவியின் வழிப்படு தொகையே

என்பது அந்நூற்பாவாகும்.

தெய்வப்புலவர் இன்பத்துப் பாலில் அலர் அறிவுறுத்தல் என்றோர் அதிகாரத்தை (115) மொழிந்துள்ளார். அலர் அறிவுறுத்தல் என்பது, களவொழுக்கத்தை அறிந்து பிறர் தூற்றதல் தனக்கு

நன்மையுடைத்ததாதலை தலைவன் தோழிக்குத் தெரிவித்தலாகும். இவ்வதிகாரத்தில் இவர், கவ்வை, கௌவை, அலர் வெளிப்படும் என்ற நான்கு சொற்களை ஆங்காங்கே பெய்துள்ளார்.

இவ்வதிகாரத்திலுள்ள இரண்டு குறட்பாக்களைக் காணலாம்.

கவ்வையால் கவ்விது காமம் அதுவின்றேல்
தவ்வென்னுந் தன்மை இழந்து. குறள் - 1144.

காதல் கவ்வையால் புலப்படுகிறது. கவ்வை இல்லையெனில் காதல் தன் இயல்புத் தன்மையை இழந்து போகும். இது இக்குறளின் பொருள் சுருக்கம்.

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறு மினது. குறள் - 1145.

குடிபோதை அதிகரிக்க அதிகரிக்க கள்ளின். மேல் ஆசை அதிகரிப்பது போல நிந்தனைப் பேச்சு பரவப்பரவக் காதலும் அதிகரித்து இன்பமளிக்கும். இது இக்குறளின் பொருள் சுருக்கம்.. இவ்விரண்டு குறட்பாக்கள் அலரால் காதல் மிகும் என்பதை தெளிவாக்குகின்றன.

இவ்வதிகாரத்திலுள்ள இரண்டு உவமைகளைக் காண்போம். ஊரார் பழிச் சொற்கள் எருவாகவும் அன்னையின் கடுஞ்சொல் நீராகவும் கொண்டு காதல் பயிர் வளர்கிறது. பழித்துப்பேசிக் காதலை அடக்கிவிடலாம் என்று எண்ணுவது நெய்யூற்றி நெருப்பை அணைத்துவிடலாம் என்று நினைப்பதற்கு ஒப்பாகும். இவ்விரண்டு உவமைகள், ஊரார் தூற்றுதலால் காதல் உறுதி கொள்ளும் என்பதை வலியுறுத்துகின்றன.

இவ்வதிகாரத்தினுள் ஐந்து தொடர்களைக் காண்போம். அலரெழ ஆருயிர் நிற்கும். அலரெனக் கீந்த திவ்வூர். கவ்வையால் கவ்விது காமம். அலரைப் பெறாதிருந்து பெற்றன்ன நீர்த்து. ஊர் எடுக்கும் அலர் உடன் போக்கிற்கு ஏதுவாகிறது. இவ்வைந்து தொடர்கள், பழிச்சொற்களால் காதல் விரிவடையும் என்பதை அறிவிக்கின்றன.

தொல்காப்பியத்தில் களவியலில் 22 ஆம் நூற்பாவைக் காண்போம்.

அலரில் தோன்றும் காமத்து மிகுதி.

இந்நூற்பாவும் கவ்வையால் காதல் பெருகும் என்பதைத் தெரிவிக்கிறது. எனவே கவ்வையால் காதலர்க்கு நன்மையே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

எத்துணை அருமையான உவமைகள். எத்துணை பொருள் நிறைந்த சொற்கள். எத்துணை அறிவார்ந்த தீஞ்சுவைகள். எத்துணை நெஞ்சார்ந்த சிந்தனைகள். முப்பாநூல் ஓதற்கு எளிது. உணர்தற்கு அரிது. அதனால் பொது மறையை உணர்தற்கு நம்முடைய ஆயுட்காலம் போதா.

மரபு

- கவிஞர் அ. கனகசபாபதி

அருகமர்ந்த ஆண்பெண்ணின் இருவர் உள்ளம்
ஆர்ப்பரிக்கும் உணர்ச்சிவெள்ளக் கொந்த ளிப்பால்
இருவரிடை **மரபுவழி காதல்** வந்து
இன்பசுகச் சங்கமத்தை ஏற்ப டுத்தும் !
உருவாகும் **மரபுவழி** வீரம் ஓங்க
ஒப்பற்ற வெற்றியினை அடையச் செய்யும் !
கருவாக **மரபுவழி** தோன்றும் அன்பே
காந்திபோன்ற மனிதரையே தோற்று விக்கும் !

அருள்குணத்தின் **மரபி**னிலே பிறந்த வர்கள்
அன்னையான **தெரசா**போல் பலபே ருண்டு !
கருவினிலே உருவாகும் குழந்தைக் கெல்லாம்
கருவிலேயே **மரபு**குணம் சேர்ந்து கொள்ளும் !
வருந்துன்ப **மரபுவழி நோய்கள்** போல
வன்நெஞ்ச மரபுவழிப் பேர்க ளெல்லாம்
தருகின்ற இடும்பைகளால் பிறரோ யென்றும்
தாங்கவொணா வேதனைகள் அடைந்து வாழ்வார் !

துரியனவன் வன்நெஞ்ச செயலி னாலே
திரௌ பதையும் பாண்டவர்கள் ஐந்து பேரும்
அரியணையைத் துறந்துவிட்டுக் காட்டிற் கேகி
அவதியுற்ற கதையொன்றே இதற்குச் சான்று !
தரிகெட்ட இராவணனின் **மரபில் வந்து**
தவறுகளை இழைப்பவன்தான் **இராச பக்சே !**
நரிபோல செயல்பட்டு ஈழ மண்ணில்
நாசமாக்கித் தமிழினத்தைக் கொன்ற ழித்தான் !

குருபாதம்

நம்பியாண்டார் நம்பிகளின் சிந்தனைகள்

தருமையாதீனப்புலவர் வித்துவான்
தா. குருசாமி தேசிகர்
மதுரை

நம்பியாண்டார் நம்பி திருப்பதிகங்களின் இரவகைக்கேற்ப முதன் முதலாகத் திருமுறைகளை வகுத்தருளியவராவார். அவர் திருநாரையூர், ஆதிசைவமரபினர், என்பதும் அவ்வூர்ப் பொல்லாப் பிள்ளையார், திருவருள் பெற்றவர் என்பதும் அவரது பேரருட்டிறத்தை அறிந்து சோழமன்னன் அவர் மூலமாக தில்லையில் திருமுறை மீட்டு எடுக்கப்பட்டது என்பதும் அனைவரும் அறிந்த செய்தியாகும். இவரது காலம் கி.பி.870-907 என்று பண்டாரத்தார் கணிந்துள்ளார். நம்பிகள் தம்மை ஆதரித்த ஆதித்தச் சோழனைத் திருத்தொண்டர் திருவந்தாதியில் மூன்று இடங்களில் பாராட்டியுள்ளதால், இவ்வாதித்தன் காலத்தவர் என்று நிர்ணயித்திருக்கின்றனர் ஆய்வாளர்.

இவரது நூல்கள்:

இவரருளிய நூல்கள் 1.திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை 2.கோயில் திருப்பண்ணியர் விருத்தம் 3.திருத்தொண்டர் திருவந்தாதி 4.ஆளுடைய பிள்ளையார் அந்தாதி 5.திருச்சண்பை விருத்தம் 6.திருமும் மணிக் கோவை 7.திருவுலாமாலை 8.திருக்கலம்பகம் 9.திருத்தொகை 10.திருநாவுக்கரசர் ஏகாதசமாலை என்பன. இவற்றுள் ஆறு நூல்கள் ஆளுடைய பிள்ளையார் என்னும் திருஞான சம்பந்தர் பொருளாக அமைந்தவை. ஆதலால் நம்பி கட்கு திருஞான சம்பந்தர் பால் தனித்த முறையில் பேரன்பு உண்டு என்பது தெளிவாகிறது.

பதினோராந்திருமுறை

இவரருளிய திருப்பாடங்கள் 11 ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. மூத்தபிள்ளையார் இலக்கியம், திருநாரையூர் இரட்டை மணிமாலையாக மலர்ந்துள்ளது. இவ்விலக்கியத்தில் நம்பிகள் தாம் பெற்ற திருவருள்து பவத்தைத் தெளிவுபடுத்துகிறார். அரசு மகிழ் அத்திமுகத்தான் என்று விநாயகரை அறிமுகப்படுத்துகிறார். என்னை நிலைந்து அடிமை கொண்டு தன்னை நினையத்தருகின்றான் என்ற நம்பிகளின் கருத்து அவளருளாலே அவந்தான் வணங்கி என்ற கோட்பாடு வெளிப்படும் திருவரட்டை மணிமாலைத்தொடர் மற்றொரு பாடலில்

"யானேத்திய வெண்பா என்னை நினைந்தடிமை

தர்னே சனார்த்தனற்கு நல்கினான்" என அருளுவார்.

இப்பாடல் வரியில் சனார்த்தனன் என்றது திருமாலின் தோற்றம் எனக்குடி மக்களால் போற்றப்படும் சோழமன்னனைப் புலப்படுத்தி அவனுடைய வேண்டு கோட்படி விநாயகர் திருவருளால் என் அடிமைத் தொண்டு மூலம் அடியார்களின் அருளிச் செயல்களை வெளிப்படுத்தும் வாய்ப்பு நிகழ்ந்தது என்ற குறிப்பினைக் காணலாம். இது அகச் சான்றுமாகும்.

திருப்பண்ணியர் விருத்தம்:

இந்நூலில் அரும்பொருள் தில்லைத் திருக்கோயிலில் எழுந்தருளியிருந்து உயிர்கட்குத் திருத்த கவிற்றாகிய இன்னருளைப்புரியும் திருவிருத்தம் எனப்படும். இதுயாப்பினால் பெயராயிற்று. 70 பாடல்களைக் கொண்ட இலக்கியமாகும். தில்லைப்பெருமான் ஆகமச்சீலர்க்கன்றி நூல்களைக் கற்றும் கற்ற வழி நடவாத வெறும் புத்தகப் பேய் கட்கு அவன் பொன்னடி புலப்படுதலில்லை என்று நம்பிகள் தெளிவுபடுத்துவார்.

"சித்தக் கோயில் இருந்தும்

திறந்து ஆகமர்க்கல்லால்

புத்தகப் பேய்களுக்கு எங்குத்ததோ

அரன் பொன்னடியே" என்பது அவர் பாடலாகும்.

மற்றொரு விருத்தத்தில் திருமராசுரர்களை அழித்துவராகிய அரன் கல்லையே பூவாக அர்ச்சித்த சாக்கிய நாயனார் சம்பவத்தை உட்கொண்டு "இழிந்தோரின் உறவை விட உயர்ந்தோரின் பகை நல்லது" என்ற முதுமொழி இதனால் வெளிப்படும் என்று பண்ணியர் விருத்தத்தில் நம்பிகள் பாடுவார்

அப்பாடல் கவனத்திற்குரியது:

"நல்வழி நின்றார் பகை நன்று
நொய்யர் உறவில்" என்னும்
சொல்வழி கண்டனம் சாக்கியனார்
கல்வழி நேர் நின்றளித்தனர்
காண்க சிவகதியே"

என்ற பாடல் நயமுடையது. திருக்கோவையாரின் பெருமையை அறிந்தும். புலவர்கள் தெளிவின்றி, அகப்பொருட்கோவைகள் பாடி மகிழ்வது, நகைப்பைத்தரும் என்று நம்பிகள் உணர்த்தும் வாசகம் படித்து உணரத்தக்கதாகும்.

"பொருளார் திருக்கோவை கண்டேயும்
மற்றப் பொருளைத்
தெருளாத உள்ளத்தவர் கவிபாடிச்
சிரிப்பிப்பரே என்று

புத்தாக்கம் செய்யும் கவிஞர்களுக்குத்திருக் கோவையாரை அறிமுகப் படுத்தும் பாங்கு உணரத்தக்கதாகும்.

திருஞான சம்பந்தர் பற்றிய சிந்தனைகள்:

துயரிலங்கும் இவ்வுலக வாழ்வைத்துளந்து வானாளப் பெறும் வாழ்வு பெற்றாலும் திருஞானசம்பந்தப் பெருமானின் பெயரைக் கேட்டு மகிழப் பெறாத நாள் துன்பநாள் என்றும் அவரை ஏத்தி மகிழும் நாள் இன்பநாள் என்றும் நமக்கு நம்பிகள் சிந்தனை நாட்டுவார்

"பாரகலத் துன்பங்கடந்த மரராற்பணியும்
ஏரகலம் பெற்றாலும் இன்னாதால்-காரகிலின்
தூமங் கமழ்மாடத் தோணிபுரத் தலைவன்
நாமக் கெவிக் கிசையா நாள்"

என்ற வெண்பா உணர்வு தருவது:

உறவும், பொருளும், ஒண்போகமும் கல்வியும் கல்வியுற்ற
துறவும், துறவிப் பயனும் எனக்குச் சுழிந்தபுனற்
புறவும், பொழிலும் பொழில் சூழ் பொதும் பும் ததும்ப வண்டின்
நறவும் பொழில் எழிற் காழியர் கோன் திருநாமங்களே

என்ற நம்பிகளின் திருவந்தாதிப் பாடல் துறவுப் பயனைச் சுட்டிக் காட்டும்.

திருஞான சம்பந்தப் பெருமானைப் பாடு பொருளாக் கொண்ட நம்பிகள் அவரைப் பாராட்டும் முறையில் திறனாய்வு செய்வாருக்கு வழிகாட்டும் வள்ளலாய் விளங்குகிறார். அவ்வாளுடைய பிள்ளையார் நம்பிகளின் வாக்கில் புலப்படும் வார்த்தைகள் படித்து ஆய்ந்து போற்றத்தக்கனவாகும்.

"பதிகப் பெருவழி காட்ட பருப்பதக் கோன் பயந்தவர்"
"மதியத் திருநுதல்பங்கள் அருள்பெற வைத்த எங்கள் நீதி
"தீந்தமிழோர் கண்டுபனை ஒங்கும் கவுணியர்தீபன்"
"குறுமன முன் கலவாத் தமிழாகரன்"
"உலகம் புரசுங் குணந்திகழ் ஞானசம்பந்தன்"

என்பன போன்ற பாராட்டுரைகள் பாலறாவாயாரின் பதிகங்களைப் பாரோர் படித்து மகிழத் தூண்டுவனவாகும்.

மூல இலக்கியப் பட்டியல்

ஆளுடைய பிள்ளையார் திருபுலாமாலையில் நம்பிகள் சம்பந்தரின் விருந்து என்றும் வனப்பமையப்பாடிய திருவிராகம்.திருவிடுகிக் குறள், திருப்பாசுரம், பல்பெயர்ப்பத்து யாழ்முரி, கக்கரமாற்று, ஈரடிமுக்கால், முதலியவற்றை அறிமுகப் படுத்தி மகிழ்வார். 'நாம்' செந்தமிழ் இலக்கியங்கற்க

விரும்பினால், இதன் பெயரையாவது தெரிந்து ஒன்றொன்றாகக்கற்பது நன்று.

திருநாவுக்கரசர் பற்றிய சிந்தனைகள்:

'திருநாவுக்கரசர், திருஏகாதசமாலை' என்ற பாடல்கள் அறிய சிந்தனைகள் அப்பரைப் பற்றிய வழங்குகிறார் நம்பிகள். அவற்றுள்

ஒன்று : திருநாவுக்கரசர் திருப்பாடல்கள் பாச நீக்கம் செய்யும் என்பதாகும்.

இரண்டு : திருநாவரசரை நினைந்து போற்றுதலே பிறவிப் பணிக்கு அருமருந்தாகும் என்பதாகும்.

மூன்று : நாவரசரை வழிபடாதவர், நிலையாத ஆக்கையினை நிலை என நம்பி வயிறு ஓம்பும் பித்தராவார் என்பதாகும்.

நான்கு : இவர் திருப்பதிகங்கள் பெருநிதி யாகும் என்பதாகும்.

ஐந்து : அப்பரடிகளின் பெயரை ஓதுபவர். நம்மிடத்துச் செல்வமில்லையே என வருந்தமாட்டார் என்பதாகும்.

ஆறு : பெருஞ் செல்வமுடையவரும் நாவரசர் நினைப்புடையவர் அச்செல்வம் நிலையாதன என்றறிந்து மெய்யுள்ளார் கொள்வர் என்பதாகும்.

ஏழு : திருநாவுக்கரசர் என்று ஓதினாலே பிறவித் துன்பம் நீங்கி திருவருள் இன்பக்கரையினை அடைந்து மகிழ்வார்கள் என்பதாகும்.

திருநாவுக்கரசர் என்ற பெயர் மாண்பினை நம்பிகள் வழிநின்று சிவப்பிரகாசர், அப்பூதியடிகளின் வாழ்வு அப்பர் பெயராலேயே அமரத்துவம் பெற்றது எனச் சுருங்கப்பாடி மகிழ்வர். அப்பாடல் தமிழின்பம் தருவது தனித்த மெய்மையை உணர்த்தவது.

உற்றானவன் தவம்: தீயில் நின்றானவன் உளண்புனவா
சுற்றானவன் நுகர்வும்; திருநாவுக்கரசெனுமோர்
சொற்றான் எழுதியுங் கூறியுமே என்றும் துன்பில் பதம்
பெற்றான் ஒரு நம்பி அப்பூதி என்றும் பெருந்தகையே

குருபணி

திருநாரையூர் என்றாலே திருமுறைக்கருவூலம் வரப் பெறவைத்த நம்பியாண்டார் நம்பிகள் நினைவுக்கு வரும் பத்துப் பாட்டு முதலிய தொகை, நூல்களைப் பாண்டியன் தொகுத்து வழங்கிய செய்தியினைப் பாலறாவாயார் அற்றன்றி மதுரைத் தொகை யாக்கினானும் என்று பாசுரத்தில் பாடிப் போற்றுவார். திருமுறைகளைத் தொகுப்பில் சோழன் முற்படாவிட்டால் திருக்கோயில்கள் தாங்கள் அனைத்தும் நங்கையவர் நளனிழந்து போனது போல ஆகியிருக்கும். திருமுறையே வடிவெடுத்த வந்தருளிய-திருவாமூர் கொண்ட தருமையா தீனத்தில் இப்போது 26வது பட்டத்தில் திரவோலக்கம் கொண்டிருக்கும் குருமணிகள்-திருமுறைகள் அனைத்திற்கும் முட்டுப் பாடின்றித் தெளி பொருள் வழங்கச் செய்ததோடு 'நம்பிகட்கு' நாரையூரில் நினைவு மண்டபமும் எழுப்பி அந்நம்பிகளின் நினைவுக் குருபூசை நாளில் தளர்வும் பாராது அங்கு சென்று வழிபட்டு அனைவரையும் வழிபடுத்தும் குரு வருளையும் நினைவு கூர்ந்து நம்பிகளை வணங்குவோமாக.

வாசகர் வாசகம் 1

மதிப்பிற்சிறந்த பெருந்தகையீர், வணக்கம்!

பார்வை : செந்தமிழ் பிப்ரவரி 2012

நன்றி

(நேரிசை வெண்பா)

சிந்துதேன் நன்மலர்நேர் செந்தமிழ் இதழ்கண்டேன்
எந்தன் மரம்கட்-டுரையொரு-வந்துள்ள
நல்வா-சகர்வா-சகம் கண்டேன்! நன்றி நன்றி!
நல்வாழ்த்து! தொண்டுதொடர்-க!

அன்புடன்,
புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

தேவதேவன் கவிதைகளில் உள்ளடக்கம்

ந. விஜயபாலன்
அண்ணாமலை நகர்

0.1 அறிமுகம்

நவீன இலக்கிய வகைகளுள் தமிழ்ப்புத்திலக்கிய வரலாற்றை எழுதுமிடத்து புதுக்கவிதை தனித்துவமிக்கதொரு இடத்தைப் பெறுகிறது. பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடல் வேண்டும் என்றான் பாரதி. 1910 இல் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் புதுக்கவிதை முயற்சி தொடங்கியது. ஏறத்தாழ அதே காலத்தில் 1908-1918 என்ற கால இடைவெளியில் பாரதியின் வசன கவிதை முயற்சி தமிழ்நாட்டில் நடந்திருக்கிறது. 1930 ஆம் ஆண்டுக்குப் பின்னரே பாரதியின் வழியில் ந. பிச்சமூர்த்தி, கு.ப. ராசகோபாலன், வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன் ஆகியோர் தொடர்ந்தனர். 1930-1940 என்ற கால இடைவெளியில் புதுக்கவிதை மேலும் வளரத் தொடங்கியது. நாளுக்கு நாள் வளர்ந்து வரும் கவிதைத்துறையும் புதுமைக் கண்ணோட்டத்திற்கு ஆட்பட்டது. சமுதாயத்தில் வளர்ச்சிக்குப் பரந்து விரியும் பாடுபொருளுக்கும் வடிகாலாகப் புதுக்கவிதை விளங்குகிறது. புதுக்கவிஞர்கள் வரிசையில் தேவதேவனும் ஒருவர். இவரது கவிதைகளில் காணப்படும் உள்ளடக்கச் சிந்தனைகள் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

0.2. உள்ளடக்கம்

தமது பரந்துபட்ட பட்டறிவையும் இன்ப, துன்ப நிகழ்வுகளையும் நெகிழ்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவும், உணர்ச்சித் ததும்பல்களாவும் கவிதைகள் வெளிப்படுகின்றன. காலத்தால் அழியாத கருப்பொருளைக் கவிதைகளின் உள்ளடக்கமாகக் கொண்டு பாமரர்களும் சுவைத்துமகிழும் நோக்கில் எழுதப்படுபவையே தேவதேவன் கவிதைகள். எளிமை, சொற்சுருக்கம், இனிய ஓசை நயம் அனைத்தும் தேவதேவன் கவிதைகளுக்கு

அணிசெய்கின்றன. ஆதலின் கேட்போர்க்கும் ஓர் ஈர்ப்பை அளிக்க வல்லதாக இவரின் கவிதைகள் விளங்குவதைக் காணலாம்.

0.3 மழலைச் செல்வம்

திருமணம் முடிந்து சில வருடங்கள் ஆகியும் மகப்பேறு இல்லாத நிலையில் துயர்கொண்டு இருப்பது மட்டுமல்லாமல் சமுதாயத்தில் பலரும் அவர்களைக் குற்றவுணர்ச்சியுடன் பார்க்கின்ற நிலை கண்டு துயர்கொள்கின்றனர். தம் துயரினைப் பொருட்படுத்தாமல் தமக்கென்று வாரிசு வேண்டும் என்பதற்காகக் குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்கலாம் என எண்ணினர். அவ்வாறு தத்தெடுக்கப்பட்ட குழந்தை தன் பெற்றோரைப் போல வளர்வதைக் கண்டு வளர்ப்பவர்கள் வருத்தமுற்றனர்.

"தங்கள் பெற்றோர்களைப் போலவே
உருமாறிக் கொண்டிருந்த நிதர்சனத்தைக்
கண்ணீர் மல்கக் கண்ணுற்றபடி" (தேவதேவன் கவிதைகள், ப.648)

தமக்கெனக் குழந்தை இல்லாத நிலையினை நினைத்து வருத்தம் கொள்கின்றனர். தமக்குள் இருக்கும் குற்றவுணர்வுகளையும் கண்ணீரையும் மறைத்துக் கொண்டு குழந்தையினை வளர்க்கின்றனர். ஆனால், வளர்த்தபின் அவனது பெற்றோரை நாடிச் சென்றுவிடுமோ என்று எண்ணி தமக்குள் ஒரு வகையான பயமும் அச்ச நிலையும் என்றுமே இருந்து கொண்டு இருக்கிறது. அவனது பிறப்புநிலையினையும் பிறர் கூறிவிடுவார்கள் என்ற அச்ச நிலையோடு வாழ்க்கையைக் கழிக்கின்றனர்.

0.4 வறுமைக் குரல்

தலைவர்கள் மக்களிடம் வறுமையை ஒழிப்பதாகவும் பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து தருவதாகவும் வார்த்தைகளை அள்ளி வீசி விடுகின்றனர். ஆனால், எதையும் நிறைவேற்றுவது கிடையாது.

"இறந்து கிடக்கும் பெண்ணின் மார்பில்
எவ்வளவு நேரம் பால் சுரக்கும்

மடிந்துபோன பிணத்தின் மவுனம்
எவ்வளவு காலம் வழி காட்டிக் கொண்டிருக்கும்."
(தேவதேவன் கவிதைகள், ப. 648)

என்ற கவிதை வரிகளின் மூலம் இறந்த பெண்ணின் மார்பில் இருந்து சில நேரம்தான் பால் சுரக்கும் பின்பு பசியின் துயரால் எப்படித் துடிக்குமோ குழந்தை அதனைப் போன்று வறுமையின் காரணமாகக் குரல் கொடுக்கின்றபோது அந்த நேரம் பசியாற்றப்படும் என்று வார்த்தைகளில் கூறிவிடுகின்றனர். மீண்டும் வறுமை நினைத்துக் குரல் எழுப்பும் போது பிணத்தின் மவுனத்தினை போன்று அனைவரும் மவுனம் சாதித்து விடுகின்றனர். பிணம் எப்படிப் புதைக்கப்படுகின்றதோ அதைப் போன்று வறுமைத் துயரால் எழுப்பிய கேள்விகளைக் குப்பைத் தொட்டியில் புதைத்து விடுகின்றனர்.

0.5 சுயநலப் போக்கு

"நன்றாய் நினைத்தவாறு
கட்டிவிட்டோம் நாம்
மிகப் பெரியதொரு விபச்சார விடுதியை
அல்லும் பகலும் ஓய்வின்றி
ஆடல், பாடல், சரசம், சல்லாபம், கொண்டாட்டம்
கேளிக்கைகளின் நீச்சல் குளக் கும்மாளம்
ஓர் எளிய மனிதனுக்கும்
அதுவும் வாழ்வின் ஒரு பகுதியானால்
அதனுள் நிகழும் விழாக்களனைத்துமே
சவச் சடங்குகளாகிவிட்டன." (தேவதேவன் கவிதை, ப. 645)

என்ற கவிதை வரிகளின் வாயிலாக அன்பும் ஆனந்தமும் அங்கே அறவே காணப்படவில்லை. பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு நடந்து கொள்கின்றனர். சிறு இன்பத்திற்காக அவர்களிடத்தில் பெரிய துன்பத்தினை ஏற்படுத்தி வருகின்றனர். இப்படிப்பட்ட வக்கிரபுத்தி உடையவர்களும் உலகில் உள்ளனர். அப்படிச் செல்கின்றவர்களுக்கு அங்கு நடக்கின்ற ஆடல், பாடல், கொண்டாட்டங்கள்

அனைத்தும் அவர்களின் சவக்கிடங்களுக்கு ஒப்பாகும். தவறான வழியில் நுகர்பவர்களை இக்கவிதையின் வழி சாட்டையால் அடிப்பது போல் சாடுகின்றார் தேவதேவன்.

0.6 வன்கொடுமை

ஒரு மனிதன் தன்மானத்தை இழக்கும்போதும், அவனைத் தாழ்வாக நடத்தும் போது அவனது மனிதப்பண்பு சிதைக்கப்படுகிறது. இது அவனது மனத்தில் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துகின்றது. தலித் சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக பல வன்முறை நிகழ்வுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. உயர் சாதியினரின் கீழ்த் தரமான நடத்தைகளுக்கு ஆளாக வேண்டியுள்ளது. இதன் காரணமாக அவர்கள் வாழும் பகுதிகள் குறிவைத்துத் தாக்கப்படுகின்றன. இதன் மூலம் அவர்களது வாழும் உரிமை பறிக்கப்படுகின்றது. இதனை,

"அதிர்ச்சியில்
அவர்கள் தாங்கள் செய்வதென்ன வென்றே
அதுவரை திட்டமிட்டு மறைக்கப்பட்டிருந்த உண்மை
அருவருக்கத்தக்க வெட்கக்கேடு
வெளிப்படையாகி விடுகின்ற தல்லவா"

(தேவதேவன் கவிதைகள், ப.634)

என்ற கவிதை வரிகளின் மூலம் பல இடங்களில் நடந்தவைகளை, இன்று சில இடங்களில் நடக்கின்றவைகளையும் தன் கவிதை வழி வெளிப்படுத்துகின்றார். தலித் மக்கள் தெரியாமல் தவறு செய்திருந்தால் அல்லது மேலாதிக்கத்தினரிடம் முரணாகப் பேசிச் செயல்பட்டால் அந்தத் தவறினை மீண்டும் செய்யாமல் இருக்கத் திட்டமிட்டு இதனைப் பார்த்து மற்றவர்களும் தவறு செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் மலத்தைத் தலித் மக்களின் வாயில் திணிக்கின்றனர். இத்தகைய மனிதத் தன்மையற்றச் செயலைத் தடுக்கவும் குற்றவாளிகளைத் தண்டிக்கவும் வேண்டும் என்று கருத்துரைக்கின்றார் கவிஞர்.

"விடிந்தும் விடியாப் பொழுதொன்றில்
தெரியாமல் ஓர் அக்ரஹாரத் தெரு வழியாய்
நுழைந்து கடந்து விட்டேன்
வெறுப்பும் அருவருப்பும் பகைக் கோபமுமாய்
துயரமும் பதற்றமும் பாசாங்குகளுமாய்க்
கொதித்த முகங்கள் கண்டு துணுக்கிற்றேன்
என் தவறுக்கு நொந்து உறுதியெடுத்தேன்"

(தேவதேவன் கவிதைகள், ப. 634)

என்று கவிதை வரிகளின் மூலம் அக்ரஹாரத்தெரு வீதிகளில் அவர்களை அல்லாத மற்றவர்கள் நடந்து சென்றால் தீட்டு என்று தண்டிப்பதுமாக இருந்தனர். அதனோடு மட்டுமல்லாமல் வெறுப்புடனும் அருவருப்புடனும், பகைக் கோபத்துடனும் நடந்துக் கொள்வர். அன்றையச் சூழலில் செருப்பு அணிந்து அக்ரஹாரம் வழியே நடக்கக் கூடாது. செருப்பினைக் கையில் எடுத்துக் கொண்டு அமைதியாகச் செல்ல வேண்டும். பாதை என்பது அனைவருக்கும் பொதுவானது. ஆனால், சிலர் செல்லத்தடை இதனால் தலித்மக்கள் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை உருவாக்கிக் கொண்டனர். இனி மனிதத் தன்மையற்ற அக்ரஹாரத் தெருவுக்குள் நுழையக் கூடாது என்ற முடிவைக் கவிதை வரிகள் மூலம் வெளிப்படுத்துகின்றார் தேவதேவன்.

0.7 நிறைவுரை

தேவதேவன் கவிதைகளல் அழுத்தமான எண்ணங்கள், நகர்த்த முடியாத சொல்லாட்சி, கலைத் தன்மைமிக்க சொற்றொடர்கள், கற்புள்ள கொள்கைகள் எனக் கூட்டுத் தன்மையாக விளங்குகின்றன. தேவதேவன் கவிதையின் உள்ளடக்கம் சாமானிய மக்களின் துயரங்களைப் பதிவு செய்கின்றது. வறுமையில் வாடும் தலித்துக்களின் பிரச்சனைகள், உல்லாச விடுதிகளில் கொள்ளை போகும் மனிதத் தன்மை, சமுதாயத்தில் நடைபெறும் இழிவுச் செயல்கள் ஆகியவை கவிதையில் உள்ளடக்கமாக அமைந்துள்ளன. இக்கவிதைகள் காலத்தை வென்று நிலைத்து நிற்கும் சக்தி வாய்ந்தவை என்று கூறலாம்.

இலக்கிய இலக்கு

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

பேனாவே கூர்வாள்; நாட்டின்
பீடைகள் சாய்க்கும் போர்வாள் !
பேனாவே உளிதான்; நாளைப்
பீடுகள் வடிக்கும் ஆக்கம் !
பேனாவே சாட்டை; தூங்கும்
பேடியை எழுப்பும் தாக்கம் !
பேனாவே கொள்ளி; மண்டும்
பேதமை தீய்க்கும் தீ,தீ !
வாழ்வியல் இலக்கை யெல்லாம்
வள்ளுவர் குறளில் சொன்னார் !
தாழாத பெண்வீரத்தின்
தனிமாண்பை இளங்கோ சொன்னார் !
ஆழமாய் அறத்தின் சீரை
அழகாகச் சாத்தன் சொன்னார் !
வீழ்ந்தநம் தமிழன் மீண்டும்
விழிக்க பாவேந்தர் சொன்னார் !
கால்நடைப் பயணத் திற்கும்
கட்டாயம் குறிக்கோள் தேவை !
நூல்ஒன்று குறிக்கோள் இன்றேல்
நுரையைப்போல் அழிந்தி டாதா?
'நாலடி' 'நீதி நூல்கள்'
நாவெலாம் தவழ்வ தேன்?ஏன்?
ஆல்போலே கிளைத்தி ருக்கும்
அற்புதக் கருத்தால் அன்றோ?
மையலை 'மயி'லே என்றும்,
'மா'னென்றும், 'குயி'லே என்றும்
ஒய்யார அன்ன மென்றும்
ஓயாமல் சொன்ன தெல்லாம்,
ஐய்யய்யோ போதும், போதும் !
ஆக்கங்கள் சேர்ப்ப தற்கு
நெய்கின்ற கவிதைக் குள்ளே
நெடும்புதுக் கருத்தே தேவை !

பாரதியின் வேளாளன் சிறைபுகுந்தான் பாட்டு ஓர் ஆய்வு

கழுகுமலை வை.பூ. சோமசுந்தரம்

முன்னுரை

பாரதி அக்கினி குஞ்சைக் கண்டவன், காக்கைச் சிறகின் கரிய நிறத்தில் நந்தலாலாவைப் பார்த்தவன். "செந்தமிழ் நாடு" என்னும் போது அவன் காதில் இன்பத்தேன் பாய்ந்துள்ளது. பராசக்தியிடம் கஞ்சத்தனமாக வரம் கேட்டவன் – பத்து, பன்னிரண்டு தென்னை மரம் போதும் அவனுக்கு ! கத்தும் குயிலோசை சற்றே காதில் விழப் பாரதி பராசக்தியிடம் கேட்டான். அவனுக்குத் தொழில் கவிதை – நாட்டிற்கு உழைப்பது. வீட்டுச் சிந்தனை இல்லை. பாட்டில் எளிமை – இனிமை – உயிர்ப்பு அவன் பெற்ற வரம் ! விநாயகர் நான்மணி மாலையில் 40 பாடல்கள் ! வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்ற நால்வகைப் பாக்களில், வகைக்கு 10 பாடல்கள். அந்தாதித் தொடையில் அழகுறப் பாடியவன் ! "என் நாவில் பழுத்த சுவைத் தெண்டமிழ்ப்பாடல் ஒரு கோடி மேவிடச் செய்" என்று பாட்டுத் திறத்தால் வையத்தைப் பாலித்திடப் பிள்ளையாரை, சக்தியை வேண்டியவன். தேசிய இயக்கப் பாடல்களில் வ.உ.சிக்கு வாழ்த்துப் பாடியவன். காந்திடிகளை 5 பாடல்களால் பஞ்சகத்தில் வாழ்த்திய பாரதி – தேசியத்; தலைவர்கள் வரிசையில் – தமிழ்நாட்டில் வ.உ.சி ஒருவரை மட்டுமே பாடிய 4 அடிகள் உள்ள அறுசீர் ஆசிரிய விருத்தப்பா ! மிக நுட்பமான – திட்பமான பாடல் இது ! பாடல் பற்றிச் சிந்திப்போம் !

பாடல்

"வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய் நீ
வருந்தலைஎன் கேண்மைக் கோவே !
தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரிவோம்
நீ இறைக்குத் தவங்கள் ஆற்றி
வாளாண்மை நின்துணைவர் பெறுகெனவே
வாழ்த்துதிநீ, வாழ்தி ! வாழ்தி !"

பாட்டின் பொருள்

வேளாளன் சிறைபுகுந்தான் – என்பதில் வேளாளன் யார்? பாட்டின் தலைப்பு "வஉசிக்கு வாழத்து" என்பதால் வேளாளன் என்பது வஉசி ! சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாடியவன் பாரதி ! சாதிப் பெயர்களைச் சில இடங்களில் பாடி இருக்கிறான். "ஆயிரம் உண்டிங்கு சாதி" என்று ஒப்புக்கொண்டவனும் அவனே ! வஉசி சிறைபுகுந்தமையைப் பாராட்டும் வகையில் வேளாளன் சிறைபுகுந்தான் என்கிறான். வேளாளர்கள் விழிப்புணர்வு பெற ! பிற சாதியினரும் துணிவுபெற "வேளாளன்" என்று பாடினான் பாரதி ! அஞ்சும் இயல்புடைய வேளாளனே சிறைபுகுந்தான் எனில், அஞ்சாதவர் என்று மார் தட்டிக்கொள்வோர் "முன்வருக" என்பது அவன் அறை கூவல் !

வேளாளன் சிறை புகுந்தான் என்பதில் வஉசி சிறைக்குள் புகுந்தார் என்று பாரதி பாடியது ஏன்? புகுதல் எனில் நுழைதல் – வஉசியே சிறைக்குள் புகுந்துள்ளார் என்பது பொருள் புதுமனை புகுவிழா – நாம் அறிவோம். 1902இல் வஉசியும் சிவாவும் நெல்லை மற்றும் தூத்துக்குடியில் சிம்மக்குரல் எழுப்பி முழங்கினர் ! நாடு விடுதலை பெற ஒத்துழையாமை, வெள்நாட்டுப் பொருள் விலக்கல், தொழிலாளர் ஒற்றுமை, விபின் சந்திரபால் விடுதலைக்கு வரவேற்பு என்று கவர்ச்சியான பொருள்பட, ஆற்று மணலில் ஆர்ப்பரிப்பு ! விளைவு ! தடை ஆணை ! அதை மீறியதால் சிறை ! எனவே, வஉசி சிறை புகுந்தார் ! 2 ஆயுள் தீவுத் தண்டனை – பின் 6 ஆண்டு தீவுத் தண்டனையாகக் குறைப்பு ! பின் 6 ஆண்டு கடுங்காவல் ! 1912இல் விடுதலை !

தமிழகத்து மன்னனென மீண்டான் என்பதில் உள்ளபடி, சிறைபட்டு, செக்கிழுத்து, துன்புற்றதால், இன்று தமிழக மூவேந்தர் போல் தமிழகத்து மன்னனாக வஉசி போற்றப்படுகிறார் ஊருக்கு ஊர் அவர் பெயரில் தெருக்கள்! கல்விக் கூடங்கள்! துறைமுகப் பெயர் ! கப்பலுக்குப் பெயர், முடிசூடா மன்னனாக வாழ்கிறார்!

மீண்டான் என்பதிலும் உண்மை உண்டு! 2 ஆயுள் தீவுத் தண்டனை – 6 ஆண்டானது ! 4 ஆண்டுகளில் வெளிவந்தார்! சிறைச் சாலையை அறச்சாலை ஆக்கி வந்தார் !

கேளாத கதை விரைவில் கேட்பாய் நீ 2 ஆயுள் தீவுத்தண்டனை பெற்றவர் மீண்டது உண்டா? இங்கு நடக்கும், கதையாக உணர்வீர் என்கிறான்

பாரதி ! நீ என்பது யார்? வஉசியிடமே பாரதி பேசுகிறான். நீ வருந்தலை என் கேண்மைக் கோவே வ.உ.சி வருந்துகிறாரா? பின் ஏன் வருந்தலை என்கிறான் பாரதி. வருந்தலை என் கேண்மைக்கோவே என் நண்பருள் அரசே வஉசி! நீ வருந்தவில்லை என்று கூறுகிறார் போலும் ! நீ சொன்ன நெறிப்படி *தாளாண்மை* பேரளவில் யாம் புரிவோம் ! *தாளாண்மை* என்பது ஊக்கம், விடாமுயற்சி ! 2 ஆயுள் தீவு தண்டனைத் தீர்ப்பைக் கேட்டுப் பாரதி கலங்கி உணர்வு வயப்பட்டுப் பாடியது போலும் ! சிறைச்சாலையில் தவம் செய் ! இறை நினைந்து போற்று, 'என்றான் பாரதி ! சிறையில் பலப்பல அறச் செயல் புரிந்தார் வஉசி ! நூல் பல எழுதினார் ! சிறையில் உள்ளோர்க்கு நல்வழி காட்டினார் ! சிறையில் இறைவனிடம் என் துணைவர் வாளாண்மை பெற வேண்டு ! வாளாண்மை புகழத்தக்க வீரம் பெறட்டும் ! வாழ்த்து ! ஆம் ! வாஞ்சி நாதன்கள் உருவாகி விட்டனரே ! ஊர் ஊராக வீரர் பலர் சிலிர்த்துக் கிளம்பினரே ! பட்டியலிட முடியுமா?

வாழ்தி ! வாழ்தி ! என்று வஉசியைப் பாரதி வாழ்த்தினார் ! ஆம் வஉசி இன்றும் வாழ்கிறார் ! வீட்டிற்கு வீடு அவர் படம் ! வீதிக்கு அவர் பெயர் ! கல்விக் கூடங்கள் பல அவர் பெயரில் !

4 வரிப் பாடலில் எத்தனை நுட்பம், திட்பம் ! விஞ்ச் துரை, வஉசி உரையாடல் பாட்டு உண்டு ! இத்தலைப்பு "ஆங்கிலேயன் - தேசபக்தன் உரையாடல்" என்று அச்சில் உள்ளது. இப்பாடலில் கரு உருவாகக் காரணம் வஉசி தானே ! சுதந்திரப் பயிர் என்ற பாடலில்,

மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ?

என்று பாரதி பாடுவதும் வஉசியை நினைவூட்டாமல் போகுமா?

பாரதியும், வஉசியும், நம் விடுதலைப் போராட்ட வீரர்களும் வளர்த்த சுதந்திரப் பயிர்

"தண்ணீர் விட்டா வளர்த்தனர்
இப்பயிரைக் கண்ணீரால் காத்தனர் !
அது கருகத் திருவுளமோ?
விளக்கு சுடர்விட்டு எரியட்டும் !
"வாழிய பாரத மணித் திருநாடு"

சங்க காலத் தமிழச்சிக்கு உரிமையிருந்ததா?

முனைவர் பொ. திராவிடமணி
தஞ்சாவூர்

சங்ககாலச் சமுதாயத்தில் பெண்களுக்கு உரிமை இருந்ததா? என்ற வினா எழும் போதெல்லாம் உரிமை இருந்தது என்று ஒரு சாராரும், இல்லை இல்லை பெண்களுக்கு எவ்வகை உரிமைகளும் வழங்கப்படவில்லை என்று மற்றொரு சாராரும் இன்றும் வாதிட்டுக் கொள்ளும் நிலையைப் பார்க்கிறோம். பெண்களுக்கு உரிமைகள் இருந்தன. அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டனர் என்று கூறுபவர்கள் வ.சுப. மாணிக்கம் தமது தமிழ்க்காதல் எனும் நூலில் கூறிய கருத்துக்களை வழிமொழிகின்றனர் அஃதாவது, பண்டைத் தமிழ்ச் சமுதாய அளவில் நோக்கின் பெண் கற்கும் உரிமையும், கவிபாடும் உரிமையும், காதலுரிமையும், காதற் களவு செய்யும் உரிமையும், காதலனை இடித்துரைக்கும் உரிமையும், இல்லறத் தொழிலுரிமையும் பெருமையும் புகழும் எல்லாம் ஆடவர்க்கு நிகராப் பெற்றிருந்தாள் என்கின்றனர். ஆனால் சங்ககாலச் *சமுதாயத்தில் ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியுமே நிலவியது.*

ஆண்களுக்கு எத்தகையக் கட்டுப்பாடுகளும் இல்லை. பெண்களுக்கு நிறையக் கட்டுப்பாடுகள் இருந்தன.

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன" (தொல். களவு - 7)

என்று ஆணின் இலக்கணத்தையும்

அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப (தொல். களவு - 8)

என்று பெண்ணின் இலக்கணத்தையும் தொல்காப்பியர் வரையறை செய்துள்ளார். இந்நூற்பாக்களின் வாயிலாக அக்காலத்தில் ஆண்களுக்கிருந்த ஆதிக்க மேம்பாட்டையும், பெண்களுக்கு இருந்த அடக்கு முறையையும் அறிய முடிகிறது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற இலக்கண விலங்கிட்டு அவளை வலம் வரச் செய்தனர் என்றால் அது மிகையில்லை.

மனைக்கு விளக்கமாகத் திகழும் தலைவி தன் காதல் கணவனின் பெயர் சொல்ல ஒரு குழந்தையைக் கருவில் சுமக்கத், தலைவனோ தன் காமத்தைச் சுமக்க முடியாதவனாய்ப் பரத்தையை நாடுகின்றான். அவன் தன் மனைவியின் நிலை பற்றியோ, பரத்தையிடம் சென்றால் தனக்கு ஏற்படும் அவப்பெயர் பற்றியோ கவலைகொள்ள வில்லை. ஏனெனில் ஆணாதிக்கம் நிறைந்த அச்சமுதாயத்தில் தலைவன் பரத்தையை நாடிச் செல்வது பெரிய குற்றமாகக் கருதப்படவில்லை எனலாம். தலைவன் பரத்தையுடன் புனலில் நீராடி மகிழ்வதையும், பர்த்தையர் சேரியில் தலைவன் பரத்தையர் புல்டசூழ மகிழ்ந்திருப்பதையும் சங்க அகப் பாடல்களின் வழி அறிகின்றோம்.

கற்புவழிபட்ட தலைவி பரத்தமையைப் பாராட்டினாலும் உள்ளத்தில் ஊடலுடையவளாகவே இருப்பாள் என்பதைத் தொல்காப்பியர்

கற்புவழிப் பட்டவள் பரத்தை ஏத்திலும்
உள்ளத்து ஊடல் உண்டென மொழிய (தொல். பொருள் – 38)

என்கிறார். பெண்கள் உள்ளத்தில் தவறு செய்த ஆண்களின் மீது வெறுப்பிருந்தாலும் அதனை வெளிக்காட்டாது புகழ வேண்டும் என்ற கருத்துப் புலப்படுகிறது. இது ஆணாதிக்கச் சமூகத்தின் உச்சத்தைக் காட்டுகிறது. அக்காலத்தில் பெண்களின் கற்பை முன்னிலையாக்கி கைகளுக்கும் கால்களுக்கும் விலங்கிட்டு வாய்க்குப் பூட்டும் போட்டிருந்தனர். இக்கருத்துக்களுக்குப் பலம் சேர்க்கும் வகையில் *ஓரம்போகியார் பாடியுள்ள* அகநானூறு – 316 வது பாடல் அமைந்துள்ளது.

ஆணாதிக்கச் சமூகமாக விளங்கிய அக்காலத்தில் ஆண் எவ்வளவு சுதந்திரமாக இருந்தான் என்பதையும், பெண் எவ்வளவு நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்தாள் என்பதையும் இப்பாடல் தெளிவுபடுத்துகிறது.

தேர்தர வந்த தெரியிழை நெகிழ்தோள்
ஊர்கொள் கல்லா மகளிர் தரத்தரப்
பரத்தமை தாங்கலோ இலெனென வறிது நீ
புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை
அதுபுலந் துறைதல் வல்லி யோரே
செய்யோள் நீங்கச் சில்பதங் கொழித்துத்
தாமட் டுண்டு தமியராகித்

தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுந ராகுதல் அறிந்தும்
அறியா ரம்மவஃ துடலு மோரே (அகம்:316:8-17)

எனும் இப்பாடலில் தலைவனின் விருப்பப்படி ஏவலர் ஆராய்ந்து அணிந்த அணிகலன்களையுடைய பரத்தையர்களைத் தேரிலே கொணர்ந்து விடவிட அவ்வூரே கொள்ளமாட்டாத அத்துணைப் பரத்தையருடனும் கூடி மகிழ்ந்திருந்தான் தலைவன். மேலும், அப்பரத்தைமை ஒழுக்கத்தில் மிகுந்த நாட்டமுடையவனாகவும் இருந்தான். இதனைக் கண்டு சகித்துக் கொள்ள முடியாத தலைவி தலைவனிடம் புலந்திருந்தாள். இந்நிலையில் தலைவியின் ஊடலைத் தீர்க்க நினைத்த தோழி தலைவியிடம் சொல்கிறாள்.

"பெருமாட்டியே ! நான் கூறுவதனைக் கூர்ந்து கேட்பாயாக ! தலைவருடைய பரத்தைமைக் காரணமாக ஊடி உணராதிருக்கும் வண்மை உடைய மகளிர் தம்மிடமிருந்து திருமகள் விலகிச் செல்ல; நொய் அரிசியை முறத்தால் கொழித்துத் தாமே சமைத்துத் தின்று; சுற்றத்தார் யாருமின்றி தனித்தவராய்; இனிய மழலை மொழி பேசுகின்ற தம்மக்கள் வற்றிய தமது மார்பைச் சுவைத்துப் பால் இல்லாமல் அழுவதைக் கண்டு வருந்திப் புலம்பியபடி இருப்பர் என்பதை உலகின் கண் அறிந்திருந்தும் கணவருடைய அப்பரத்தைமை ஒழுக்கத்திற்காக அவரைப் பகைப்பவர் அறிவிலாதார். ஆதலின் ஊடலைக் கைவிடுவாயாக" என்கிறாள்.

இப்பாடல் சங்க காலச் சமுதாயத்தில் ஆடவர்கள் செய்த இழிசெயலைக் கண்டு அவர்களை வெறுத்த பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பட்டியலிடுகின்றது. தவறு செய்த ஆண்மகனுக்குத் தண்டனை வழங்குவதை விடுத்து, தவறு செய்த ஆண்மகனை வெறுத்த பெண்ணுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

1. அநீதியைக் கண்டித்த பெண்ணை விட்டுப் பெண் கடவுளாகிய திருமகள் சென்று விடுவாள் என்பதும்,

2. நொய்யரிசியைச் சமைத்து உண்ணும் நிலை ஏற்படும் என்பதும்

3. உறவினர்கள் ஒதுக்கி வைப்பர் என்பதும்

4. பால் வற்றிய மார்பைச் சுவைத்த தன் குழந்தை அழுவதைக் கண்டு வருந்துவர் என்பதும்,

மறைமுகமாகப் பெண்ணைப் பலகீனப்படுத்துவதும், தன்னம்பிக்கை இழக்கச் செய்வதுமாகும். ஆண்துணையின்றிச் சமூகத்தில் நீ மதிப்புடன் வாழ முடியாது

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 May 2012 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- ✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

From

SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1**, and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.